பக்கங்கள் 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் - 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 21 புதன்கிழமை 31.12.2025 கதிர் 052

## இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த தலைவர்களுக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நேற்று செவ்வாய்கிழமை 2

# தையிட்டி விகாரை சட்டவிரோதம் என்று அறிவித்தால் ஏற்கத் தயார்

## பிரச்சினை முடியும்வரை புதிய கட்டுமானங்களும் இல்லை விகாரதிபதியான ஜின் தோட்டை நந்தாராம தேரர் அறிவிப்பு




தையிட்டி விகாரைப் பிரச்சினை தொடர்பில் ஆளும்தரப்பு நியமித்த குழு விசாரணை நடத்தி வருகின்றது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம். விகாரை சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டால் அதனையும் ஏற்கத் தயாராகவே இருக்கின்றோம் என தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரர் உறுதியளித்துள்ளார்.

தையிட்டி விகாரையில் உள்ள விகாராதிபதியின் வாசஸ்தலத்தில் நேற்றுச் செய்தியாளர்களை அழைத்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தையிட்டியில் திஸ்ஸ விகாரையில் ஜனவரி 3 பௌர்ணமி தினத்தில் வழமையான பூசை வழிபாடுகள்தான் நடைபெறும். விசேட பூசை வழிபாடுகள் எதற்கும் விகாராதிபதியாக நான் இடமளிக்கவில்லை.

தெற்கில் இருந்து புத்தர்சிலை எடுத்து வருவதாகவும், அன்றைய தினம் விசேட பெரஹறா நடைபெறவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் நான் அப்படிப்பட்ட எதற்கும் அனுமதி கொடுக்கவில்லை. 6

# அரச பொறிமுறையைச் சீர்குலைக்கவே அரசமைப்புப் பேரவை செயற்படுகிறது

## அமைச்சரவைப் பேச்சாளர் நேரடியாகக் குற்றச்சாட்டு

பரிந்துரைக்கப்படுபவரை விட, வேறொருவர் தகுதியானவர் எனக் கூறும் உரிமை அரசமைப்பு பேரவைக்கு இல்லை. அரச பொறிமுறையை சீர் குலைப்பதற்காகவே அரசமைப்பு பேரவை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. அரசமைப்பு பேரவை உறுப்பினர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் பரந்தளவில்



சிந்தித்து செயற்பட வேண்டும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அவர் அங்கு இதனைத் 2

# 2026இல் பொருளாதார வெற்றியைப் பெற சுங்கம் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்

## அரசுத் தலைவர் அநுரகுமார அழைப்பு

இலங்கை சுங்கத் திணைக்களம் புதிய திட்டங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி 2026ஆம் ஆண்டில் நாட்டை பொருளாதார ரீதியில் வெற்றிப்பெற தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.



இலங்கை சுங்கத் திணைக்களம் 2025 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்றுக் காலை இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு வருகை தந்த அரசுத் தலைவர், சுங்கப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

இதன்போது 2025 ஆம் ஆண்டு , இலங்கை சுங்கத் திணைக்களம் வரலாற்றில் அதிக வருமானத்தை ஈட்டிய வருடமாக பதிவாகியுள்ளது. எதிர்பார்த்த வருமான இலக்கான 2115 பில்லியன் ரூபா வருமானத்தை தாண்டி, 300 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்துடன் 2026 ஆம் ஆண்டைத் தொடங்க முடிந்துள்ளது என இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் அருக்கொட தெரிவித்தார்.

நாட்டுக்கு அவசியமான வருமானத்தை ஈட்டித்தந்து, பொருளாதார மற்றும் சமூக நிலைபேற்றை உருவாக்க இலங்கை சுங்கத் திணைக்களம் வழங்கிய பங்களிப்பை இதன்போது 2

# பிரட்டனில் 'சேர்' பட்டம் வழங்கி தமிழ் கல்விமானுக்கு மதிப்பளிப்பு

இலங்கையைச் சேர்ந்த கல்வியியலாளரும் பிரித்தானியாவின் லெஸ்டஷயர் பல்கலைக்கழகத்தின் தற்போதைய தலைவர் மற்றும் உபவேந்தருமான பேராசிரியர் நிஷான் கனகராஜா, உயர் கல்வித்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக 2026 ஆம் ஆண்டுக்கான பிரித்தானிய மன்னரின் அதியுயர் கௌரவப்பட்டமான 'சேர்' பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிறந்த நிஷான் கனகராஜா யாழ் பரி.யோவான் கல்லூரியின் பழைய மாணவராவார். இலங்கையில் தனது பாடசாலைக்கல்வியைப் பூர்த்திசெய்த அவர், பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தனது இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்களை நிறைவு செய்தார்.

அதனைத்தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு லெஸ்டஷயர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நியமிப்படுவதற்கு முன்னர் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பதவிநிலை உள்ளடங்கலாக சுமார் 3 தசாப்தகாலமாக உயர்கல்வித்துறையில் பல்வேறு பதவிகளை வகித்தார்.

இந்நிலையில் பிரித்தானியாவில் உள்ள அதியுயர் பல்லினத்தன்மை வாய்ந்த பல்கலைக்கழகத்துக்குத் தலைமை தாங்குபவர் என்ற ரீதியில் உயர்கல்வித்துறைக்கான நிஷான் கனகராஜாவின் பங்களிப்புக்கான அங்கீகாரத்தை வழங்கும் வகையிலேயே இந்த அதியுயர் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை போரினால் பாதிக்கப்பட்ட நிலத்திலிருந்து வந்த ஒருவனின் குறிப்பிட்டுக்கூறத்தக்கதோர் பயணம் என வர்ணித்திருக்கும் நிஷான் கனகராஜா, ஒருவனின் வாழ்க்கையை மாற்றக்கூடிய சக்தி கல்விக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# 'ஐஸ்' போதைப் பொருள் பாவனை 5 மாவட்டங்களில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது. 2



# சமஷ்டி தொடர்பில் ஏனைய கட்சிகளின் கருத்தையும் அறிய முற்பட்ட ஸ்டாலின்



தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வே வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் அதே நிலைப்பாட்டில் இருக்கின்றவா? என தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தம்மிடம் வினவினார் எனவும், அக்கட்சிகளும் சமஷ்டி தீர்வு எனும் கொள்கையை முன்னிலைப்படுத்தியே மக்கள் ஆணையைப் பெற்றமையினால் அவை அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கவேண்டும் எனத் தாம் பதிலளித்தார் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ண உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசமைப்பினைக் கொண்டுவருவதற்கான அழுத்தங்களை வழங்குமாறு வலியுறுத்தி தமிழ்நாடு அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்த தமிழ்த் 6

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் பொலிஸாரால் நேற்று கைது

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜோஹான் பெர்னாண்டோ, லங்கா சத்தோச நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் நேற்று பொலிஸ் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

லங்கா சத்தோச நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி மற்றும் மேலும் சில வாகனங்களைச் சட்டவிரோதமான முறையில் கையாண்டமை 2

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை எதிர்த்து பல்லை ஆசிரியர்கள் ஒருநாள் பணிப்புறக்கணிப்பு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அரச பல்கலைக்கழகங்களின் சுயாதீனத் தன்மையில் மேற்கொண்டு வரும் முறையற்ற தலையீடுகளைக் கண்டித்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று (30) ஒரு நாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

ஆளும்தரப்பு தற்போது பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றது. எனினும், 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் அகிலவிராஜ் காரியவசம், ருவான் விஜேவர்தன மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாச மாத்திரமே பங்கேற்றிருந்தார்.

இச்சந்திப்பு குறித்து தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ள எதிர்க்கட்சி தலைவர், "எமது தாய்நாடு எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தேசிய இலக்குகளை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் நிறைவேற்ற புதுமையான கொள்கை நடவடிக்கைகளை வகுப்பதன் முக்கியத்துவம் குறித்து பயனுள்ள மற்றும் நேர்மறையான கலந்துரையாடல்கள் நடைபெற்றன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர இந்த சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்ற காரணிக்கு அப்பால் எதிர்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஐக்கிய மக்கள் கூட்டணியாக பயணத்தை தொடர்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் ஊடாக ஒவ்வொரு கட்சிகளதும் தனித்துவத் தன்மை பாதுகாக்கப்படும் என்ற காரணி வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் இணைவுக்குத் தான் தலைமைத்துவப் பதவி வகிப்பது தடையாக இருக்குமெனில், அதனை துறக்க தயாராக இருப்பதாக அண்மையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை தொடர்பிலும் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் அந்த விடயம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாமை குறித்து சஜித் சுட்டிக்காட்டியுள்ளார். அது மாத்திரமின்றி கடந்த ஐ.தே.க. சம்மேளனத்தில் கட்சி தலைவராக ரணில் விக்கிரமசிங்க ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தத் தீர்மானத்தை மாற்றுவதாயின் ஐ.தே.க. கட்சி யாப்பிற்கமைய மீண்டுமொரு விசேட சம்மேளனத்தைக் கூட்டி அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவைக் கைவிட்டு

## அரச பொறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 153 மற்றும் 41 சி உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கான பெயர் அரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்படும். அரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்படும் அந்த பெயர் அரசமைப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அரசமைப்பின் 153ஆம் உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தகுதியுடைய கணக்காய்வாளர் ஒருவரே பரிந்துரைக்கப்படுவார்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 'தகுதியுடைய கணக்காய்வாளர்' என்ற ஏற்பாடுகளுக்கமைய அரசுத் தலைவர் 4 சந்தர்ப்பங்களில் தனது பரிந்துரைகளை முன்வைத்துள்ளார். அதனை யாராலும் சவாலுக்குட்படுத்த முடியாது. அரசமைப்பில் அரசுத்தலைவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தகுதியுடைய பெயர்களையே அவர் பரிந்துரைத்தார்.

இரு சந்தர்ப்பங்களில் நிரந்தர நியமனங்களுக்கான பெயர்களைப் பரிந்துரைத்தார். இவை தவிர ஏனைய இரு சந்தர்ப்பங்களிலும் கணக்காய்வாளர் திணைக்களத்திலுள்ள மூத்த கணக்காய்வு அதிகாரிகளது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. ஆனால் இந்தப் பெயர்கள் அனைத்தும் அரசமைப்பு பேரவையால் நிராகரிக்கப்பட்டன.

அரச பொறிமுறையைச் சீர் குலைப்பதற்காகவே அரசமைப்பு பேரவை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. பரிந்துரைக்கப்படுபவரை விட, மற்றொருவர் தகுதியானவர் எனக் கூறும் உரிமை அரசமைப்பு பேரவைக்கு இல்லை. பரிந்துரைக்கப்பட்டுள்ள பெயர் பதவிக்குத் தகுதியானதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் மாத்திரமே அரசமைப்புப் பேரவைக்குக் காணப்படுகிறது.

அரசமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுவார்களாயின், தேசிய தேவையை கவனத்தில் கொண்டு செயற்படவில்லை எனில் அரசாங்கம் என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்வது மிகக் கடினமாகும். அவர் பரந்தளவில் சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசமைப்பு பேரவைக்கு காணப்படுகிறது என்பதை நினைவுபடுத்துகின்றோம் என்றார்.

## ஜோன்ஸ்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அவற்றை அவமதிப்பு செய்தமை தொடர்பாக ஜோஹான் பெர்னாண்டோ மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்த விரிவான விசாரணைகளைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டார்.

வாகனங்கள் அவமதிப்பு செய்யப்பட்டமைக்கு மேலதிகமாக, குறித்த நிறுவனத்தில் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் நிதி முறைகேடுகள் மற்றும் அநீதியான நடைமுறைகள் இடம்பெற்றுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நிதி மோசடிகள் மற்றும் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், உரிய சட்ட நடைமுறைகளின் கீழ் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே, நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன. குறிப்பாக, பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் காலவரையறையின்றி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தத் தன்னிச்சையான நடவடிக்கை, பல்கலைக்கழகக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை முற்றாகச் சீர்குலைக்கும் செயல் என ஆசிரியர் சங்கங்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளன. இந்நிலையில், இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

இந்தப் பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள நியமனத் தடைகள் காரணமாக, நாட்டின் பல அரச பல்கலைக்கழகங்களின் அன்றாட நிர்வாகச் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களின் சுயாதீனத்தைப் பறிக்கும் வகையில் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கடிதங்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கை.

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் ஆணைக்குழு தொடர்ந்து மேற்கொண்டு வரும் அரசியல் மற்றும் நிர்வாகத் தலையீடுகளை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஆணைக்குழுவின் நியாயமற்ற செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தோம். இதனால் பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் விரிவுரைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தன.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடின், எதிர்காலத்தில் தொடர்ச்சியான மற்றும் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராக உள்ளோம் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2026இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாராட்டிய அரசுத் தலைவர், அதற்காக அனைத்துப் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

நாட்டுக்கு வருமானம் ஈட்டித்தரும் பிரதான நிறுவனமான இலங்கை சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகளை செயற்திறனாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், புதிய திட்டங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி 2026 ஆம் ஆண்டில் நாட்டை பொருளாதார ரீதியில் வெற்றிக்கு இட்டுச்செல்ல அர்ப்பணிப்போம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொருளாதார வீழ்ச்சிக்கு நாட்டுக்கு தேவையான வருமானம் கிடைக்காமை மற்றும் நாட்டுக்கு அவசியமான டொலர்கள் கிடைக்காமை ஆகியவையே காரணமானது. எதிர்பார்த்த வருமான இலக்கை அடைந்து, நாட்டில் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை உருவாக்க தற்போது ஆளும்தரப்பால் முடிந்துள்ளதாகவும், கடந்த பேரிடர் நிலைமையை எதிர்கொள்ள அது ஒரு பலமாக அமைந்ததாகவும் அரசுத் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம், 2026 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அது குறித்த புதிய ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

வருமானம் சேகரிப்பு, வர்த்தகத்தை இலகுபடுத்தல், சமூக பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி ஆகிய 4 பிரிவுகளின் கீழ் இலங்கை சுங்கத் திணைக்களம் செயற்படுவதோடு, அந்தந்தப் பிரிவுகளின் முன்னேற்றம் குறித்து இதன் போது அரசுத் தலைவர் கேட்டறிந்தார்.

நிறுவனத்தில் நேர்மையான கலாசாரத்தை மேம்படுத்துவதற்காகவும் நிறுவப்பட்ட உள் விவகாரப் பிரிவு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

சுங்க நடவடிக்கைகளில் பெரும்பாலும் குற்றஞ் சாட்டப்படும் நெரிசல், தாமதம் மற்றும் ஊழல்களைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அரசுத் தலைவர் கேட்டறிந்ததுடன், பொருட்கள் சோதனை செய்யும் கட்டமைப்பை நவீனமயபடுத்தும் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை சுங்கத்தை டிஜிட்டல்மயமாக்குவதற்காக 2026 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் திட்டம் குறித்து அரசுத் தலைவருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், பணியாளர் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, பயிற்சி, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் உறுதிப்பாடின்மையை உருவாக்கும் முயற்சிகள் மற்றும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதால், அதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுவதைத் தடுப்பதில் விமான நிலையம் மிக முக்கிய இடம் என்று சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும் அரசின் இருப்பு தொடர்பான பொறுப்பை இணங்கண்டு அதன் செயல்பாடுகளைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## ஐஸ் போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் ஐஸ் போதைப்பொருள் பாவனை மற்றும் தம்வசம் வைத்திருத்தல் குற்றச்சாட்டில் 61 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி பணிப்பாளர் தமர தர்ஷன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகிறோம். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கை மற்றும் ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஆகவே சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு போதைப்பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இதற்கமைய 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய கொள்கைத் திட்டம் குறித்து பொதுமக்களிடமிருந்து யோசனைகள் கோரப்படும். அதனைத் தொடர்ந்து முதல் காலாண்டில் ' போதைப்பொருள் ஒழிப்பு தேசியக் கொள்கை' வெளியிடப்படும்.

2008-2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சமூககட்டமைப்பின் போதைப்பொருள் பாவனை மற்றும் கைதுகள் அதிகரித்த போக்கு காணப்படுகிறது. ஹெரோய்ன், கஞ்சா ஆகிய போதைப்பொருள் பாவனை முன்னைய காலத்தில் இருந்து காணப்படுகிறது. ஐஸ் போதைப்பொருள் அண்மை காலத்தில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. கஞ்சா மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஒப்பிடுகையில் ஐஸ் போதைப்பொருள் பாவனை சமூக கட்டமைப்பில் அதிகளவான போக்கில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

மாவட்ட அடிப்படையில் பார்க்கையில் மேல், மத்திய, தெற்கு, சப்ரகமுவ, வடக்கு ஆகிய மாகாணங்களில் சகல விதமான போதைப்பொருட்களின் பாவனையும் தீவிரமடைந்துள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் ஐஸ் போதைப்பொருள் பாவனை மற்றும் தம்வசம் வைத்திருத்தல் குற்றச்சாட்டில் 61 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள் குற்றச்சாட்டினால் பலர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புக்காக ஆளும்தரப்பு விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எத்தனை திட்டங்களை அமுல்படுத்தினாலும் அவற்றுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்காவிடின் அது வெற்றியடையாது. ஆகவே போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# இஸ்ரேல் தொழிற்சந்தைக்கு இலங்கையரை அனுப்ப அனுமதி

*இலங்கை தொழிலாளர்களை இஸ்ரேல் நாட்டில் திட்டவட்டமான உழைப்புச் சந்தையில் தற்காலிக தொழில்களில் அமர்த்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*அதற்கமைய இது தொடர்பில் இலங்கை ஆளும்தரப்புக்கும் மற்றும் இஸ்ரேல் ஆளும்தரப்புக்கும் இடையில் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2020.02.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*வீட்டுப்பணி, விவசாயம், கட்டுமானம், ஹோட்டல், வீட்டுப் பராமரிப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகள், உற்பத்தி மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் போன்ற துறைகளில் காணப்படுகின்ற தொழில்களுக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்குரிய நடைமுறைத்திட்டங்களில் அவ்வப்போது கையொப்பமிடப்பட்டுள்ளது.*

*குறித்த ஒப்பந்தங்களின் கீழ் இஸ்ரேலின் வணிக மற்றம் சேவைத் துறைகளிலுள்ள தொழில்களுக்கு இலங்கைத் தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இஸ்ரேல் அரசு உத்தியோகபூர்வமாக விருப்பம் தெரிவித்துள்ளது.*

*அதற்கமைய, அத்துறைகளிலுள்ள தொழில்களுக்கு இலங்கைத் தொழிலாளர்களை தொழிலில் அமர்த்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் இருதரப்பினருக்கிடையில் தற்போது கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் 'பு' பணிச்சட்டகத்தின் கீழ் கையொப்பமிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அமைச்சரவைக்குத் தெளிவூட்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 2026இல் இலங்கை எதிர்கொள்ளவுள்ள சவால்

*நாளை விடியற்காலையில் இலங்கை ஒரு புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கிறது. சிலர் கனவுகண்ட மீட்சி, வளர்ச்சி, நம்பிக்கை நிறைந்த வருடமாக 2026 அமையும் என்ற எதிர்பார்ப்புகள், 'தித்வா' சூறாவளியின் கொடூரத் தாக்கத்தால் கடுமையாகச் சிதைந்துள்ளன. பொருளாதார மீட்சி என்ற நுண்ணிய நிலை, இயற்கையின் ஒரு தாக்குதலால் எவ்வளவு எளிதில் தளர்ந்து விடும் என்பதை 'தித்வா' மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவூட்டியுள்ளது.*

*'தித்வா' தொடர்பான முன்னறிவிப்பு, பேரிடர் முகாமைத்துவம், ஆளும்தரப்பின் பொறுப்பு எனப்பல விவகாரங்கள் குறித்த குற்றச்சாட்டுகளும் எதிர்க்குற்றச்சாட்டுகளும் தொடர்கின்றன. ஆனால், குற்றப் பங்கீடு பற்றிய விவாதங்களுக்கு அப்பால், ஒரு உண்மை மறுக்க முடியாதது. மனிதனால் உருவாக்கப்பட்டவையாக இருந்தாலும், இயற்கைச் சீற்றங்களாக இருந்தாலும், இலங்கை இன்னமும் மீட்சி பெறவில்லை என்பதே அந்த உண்மை.*

**எண்கள் சொல்லும் உண்மை**

*உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களின் கணிப்புகளின்படி, 'தித்வா' ஏற்படுத்திய நேரடி உடைமைச் சேதம் சுமார் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள். இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 4 சதவீதத்திற்கு இணையானது. சமீப கால இலங்கை வரலாற்றில் மிகப் பேரழிவை ஏற்படுத்திய சூறாவளிகளில் ஒன்றாக 'தித்வா' பதிவாகியுள்ளது.*

*இந்தப் பேரிடரால் நாட்டின் 25 மாவட்டங்களிலும் சுமார் 20 இலட்சம் மக்கள், 5 இலட்சம் குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழ்வாதாரங்கள் சிதைந்தன் அடிப்படைச் சேவைகள் தடைபட்டன் பொருளாதாரச் செயல்பாடுகள் நிலைகுலைந்தன. குறிப்பாக, மத்திய மாகாணமே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் மட்டும் சுமார் 689 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் வெள்ளப்பெருக்குகளாலும், ஒரு அளவுக்கு நிலச்சரிவுகளாலும் இந்த சேதம் ஏற்பட்டுள்ளது.*

**உள்கட்டமைப்பு முதல் வீடுகள் வரை**

*வீதிகள், பாலங்கள், ரயில்பாதைகள், குடிதண்ணீர் விநியோகக் கட்டமைப்புக்கள் உள்ளிட்ட உள்கட்டுமானங்கள் மட்டும் சுமார் 1.735 பில்லியன் டொலர் சேதத்தை சந்தித்துள்ளன. இது மொத்த சேதத்தின் 42 சதவீதம். இணைப்புத் திறன் பாதிக்கப்பட்டதால் சந்தைகள், சேவைகள், வேலைவாய்ப்புகள் அனைத்தும் தடைபட்டுள்ளன.*

*வீடுகள் மற்றும் அவற்றின் உட்பொருட்கள் தொடர்பான சேதம் சுமார் 985 மில்லியன் டொலர்கள். இது கட்டடங்கள் எங்கு அமைக்கப்படுகின்றன, வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்புகள் எவ்வளவு போதுமானவை, காற்றழுத்தம் மற்றும் வெள்ளத்தைத் தாங்கும் வகையில் கட்டட வடிவமைப்புகள் உள்ளனவா என்ற கேள்விகளை மீண்டும் எழுப்பியுள்ளது.*

*இலங்கை சமீப கால உணவுப் பாதுகாப்பு நெருக்கடியிலிருந்து மெதுவாக மீண்டுகொண்டிருந்த வேளையில், டிட்வா புதிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. உலக வங்கியின் கணிப்பின்படி, வேளாண்மையில் மட்டும் சுமார் 814 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளது. நெற்பயிர்கள், காய்கறிகள், சுயநிலைக் விவசாயம், சோளம், கால்நடை வளர்ப்பு, வேளாண் உள்கட்டமைப்பு, உள்நாட்டு மீன்பிடி ஆகிய அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. இது ஏற்கனவே மோசமான கிராமப்புற சமூகங்களில் உணவுப் பாதுகாப்பையும் வாழ்வாதாரத்தையும் கடுமையாகப் பாதிக்கும்.*

**ஐஎம்எஃப் மற்றும் கடினமான முடிவுகள்**

*2028 ஆம் ஆண்டு முதல் மீண்டும் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலக்கெடுவை இலங்கை நெருங்கிக்கொண்டிருக்கும் சூழலில், 'தித்வா' ஏற்படுத்திய பெரும் மீள்கட்டுமானச் செலவுகள், ஐஎம்எஃப் உடன் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கும் காலக்கெடுகளுக்கும் பெரிய தடையாக அமைந்துள்ளன. அதே நேரத்தில், மலைப்பாங்கான பகுதிகளில் திட்டமிடப்படாத குடியிருப்பு வளர்ச்சி, நிலப் பயன்பாடு, சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்து இலங்கை கடுமையான சுயவிமர்சனத்திற்குள் செல்ல வேண்டிய நிலையையும் உருவாகியுள்ளது. வருங்காலங்களில் சில கசப்பான கொள்கை முடிவுகளை நாடு எடுக்க வேண்டியிருக்கும் அவை ஆட்சி சவால்களையும் உருவாக்கும்.*

*உள்நாட்டு சவால்களுக்கு நடுவிலும், சர்வதேச அரங்கிலும் இலங்கையின் சவால்கள் குறையவில்லை. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் மூலோபாய முக்கியத்துவம் 2026 இலும் அதிகரிக்கும். சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான போட்டி தீவிரமடைகிறது. இத்தகைய சூழலில், முக்கிய கடற்பாதைகளுக்கு அருகில் உள்ள சிறிய தீவு நாடான இலங்கை, உலக சக்திகளின் போட்டியில் நேரடியாகப் பாதிக்கப்படக்கூடிய நிலமையில் உள்ளது. ஆனால், தேசிய நலன்களைத் திறமையாக முன்னெடுத்தால், இந்தக் குழப்ப காலம் இலங்கைக்கு வாய்ப்பாகவும் மாறக்கூடும்.*

**புதிய ஆண்டின் பொறுப்பு**

*எதிர்காலம் எப்படியிருந்தாலும், ஆளும்தரப்பு வாக்குறுதி அளித்த வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை நடைமுறைப்படுத்த மக்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆட்சியின் 'தேனிலவு காலம்' முடிந்துவிட்டது. ஆட்சி விவகாரங்களை அரசியல்வாதிகளிடமே விட்டுவிட்டால், கடந்த காலத் தவறுகளை மீண்டும் செய்வதற்கான அபாயம் உள்ளது.*

*2026 என்பது ஆளும்தரப்பிற்கு மட்டும் அல்ல ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்புகளைக் கொண்டுவரும் ஆண்டு. மீள்கட்டுமானம், தாங்கும்திறன் கொண்ட நாடு, கண்காணிக்கும் குடிமக்கள் – இவை அனைத்தும் ஒன்றிணைந்தாலே இலங்கையின் பயணம் கீழ்நோக்கி மாறாமல் தடுக்க முடியும். புதிய ஆண்டில் அனைவருக்கும் நல்வாழ்த்துகள். மனிதநேயத்துடன், ஒருவருக்கொருவர் கருணையுடன் நடப்பதே இந்த நாட்டின் மீட்சி பாதையின் முதல் படியாக இருக்கட்டும்.*

# 'தித்வா' புயலால் பாதிக்கப்பட்டவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்படமாட்டார்

### அமைச்சரவைப் பேச்சாளர் உறுதி

'தித்வா' புயலால் பாதிக்கப்பட்டவர்களை எந்த சந்தர்ப்பத்திலும் பலவந்தமாக இடைத்தங்கல் முகாம்களிலிருந்து வெளியேற்ற ஆளும்தரப்புத் தயாராக இல்லை. குடியிருப்புக்களை இழந்தவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் பாதுகாப்பாக மீளக் குடியமர்த்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரையில் 6090 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு இரு முறைமைகளின் கீழ் இழப்பீடு வழங்கப்படும். முதலாவது முறைமை சேதமடைந்த வீடு அமைந்துள்ள காணியில் அபாயமின்றி தொடர்ந்தும் வாழ முடியுமெனில் அவ்வாறானவர்களுக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

இந்த கொடுப்பனவு குறித்த வீட்டின் பெறுமதி மதிப்பீடு இன்றி வழங்கப்படும். இரண்டாவது முறைமையின் கீழ் வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ள அதேவேளை, அந்த வீட்டில் மீண்டும் குடியேற முடியாத நிலமை காணப்பட்டால் காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் 50 இலட்சம் ரூபா வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஆளும்தரப்புக்குச் சொந்தமான காணிகள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனவரி முதலிரு வாரங்கள் நிறைவடைய முன்னர் இந்த இழப்பீடுகளை வழங்கும் வேலைத் திட்டத்தைத் தொடங்க முடியும்.

பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்காக 25 இலட்சம் ரூபா வரை இழப்பீடு வழங்கப்படும். பகுதியளவில் சேதமடைந்த வீடுகளில் சேத மதிப்பீடுகள் இன்றி 5 இலட்சம் வழங்கப்படும். அதன் பின்னர் சேத மதிப்பீடுகளுக்கமைய அந்தத் தொகை 25 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படும்.

அரச அதிகாரிகளால் சேத மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்போது, அது குறித்து திருப்தியடையாதவர்கள் பிரதேச செயலாளர்கள் அல்லது இடர் முகாமைத்துவ அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும். உலக வங்கியின் தொடக்க கட்ட மதிப்பாய்வுகளுக்கமைய 4.1 பில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 ஆயிரம் ரூபா தொடக்க கட்டக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டிய 450,225 வீட்டு அலகுகள் அடையாளங் காணப்பட்டன. அவற்றில் இதுவரையில் 393,669 வீட்டு அலகுகளுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. கண்டி, அம்பாறை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்தக் கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் 80 - 90 சதவீதம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் பலவந்தமாக இடைத்தங்கல் முகாம்களிலிருந்து வெளியேற்ற ஆளும்தரப்பு தயாராக இல்லை. குடியிருப்புக்களை இழந்தவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் பாதுகாப்பாக மீள் குடியேற்றப்படுவர் - என்றார்.

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது



களுத்துறை தோடங்கொட பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தோடங்கொட, நேஹின்ன பகுதியில் திங்கட்கிழமை மாலை 4:45 மணியளவில் இடம்பெற்ற ஒரு இறுதிக்கிரியையின் போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட வேட்பாளரான விஜயரத்ன பண்டார என்பவருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் குமாரசிறி ஜயசிங்க என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே சண்டையாக மாறியது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தர்க்கம் முற்றிய நிலையில், குமாரசிறி ஜயசிங்க அங்கிருந்த நாற்காலியால் விஜயரத்ன பண்டாரவை பலமாகத் தாக்கியுள்ளார். இத்தாக்குதலில் காயமடைந்த விஜயரத்ன பண்டாரசிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, தாக்குதலை நடத்திய ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் உறுப்பினர் குமாரசிறி ஜயசிங்கவை தோடங்கொட பொலிஸார் உடனடியாகக் கைது செய்தனர். அரசியல் ரீதியான கருத்து முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பேரிடர் உதவிகளை முகாமை செய்ய தனியான உயர் மட்டக் குழு அமைப்பு

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நாடுகளிலிருந்து கிடைக்கும் மனிதாபிமான உதவிகளைமுறையான முகாமைத்துவத்துடன் பகிர்ந்தளிப்பதற்கான விசேட பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெளிநாட்டு மனிதாபிமான உதவிகள் மற்றும் உதவிக் குழுக்களை முகாமைத்துவம் செய்வதற்காக அரசுத் தலைவரால் தனது தலைமையில் உயர் மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேக்கர தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று செய்தியாளர்களை அழைத்துச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை மேற்கொள்வதற்காகப் பல்வேறு நாடுகள் முன்வந்துள்ளன.

இந்த வெளிநாட்டு மனிதாபிமான உதவிகள் மற்றும் உதவிக் குழுக்களை முகாமைத்துவம் செய்வதற்காக அரசுத் தலைவரால் எனது தலைமையில் உயர் மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு கடந்த சில நாட்களாகக்கூடி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஊடாக நாட்டிற்கு கிடைக்கும் உதவிப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைப் பட்டியலிட்டு, அவற்றை ஒருகொடவத்தை பகுதியில் உள்ள விசேட களஞ்சியசாலையில் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை இந்தியா, ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கனடா, ஐக்கிய அரபு இராச்சியம், பாகிஸ்தான், இஸ்ரேல், மாலைதீவு உள்ளிட்ட 22 நாடுகளும், உலக உணவுத் திட்டமும் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளன.

இந்த உதவிகள் உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், தற்காலிகக் கூடாரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், சிவில் பொறியியல் தளபாடங்கள் மற்றும் ஆடைகள் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகப் பெறப்படும் தேவைகளுக்கமைய, பாதிக்கப்பட்ட 20 மாவட்டங்களுக்கும் இந்தப் பொருட்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

இதுவரை சுமார் 2,161.72 தொன் உணவுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அவற்றில் 1,800 தொன் பொருட்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் ஊடாக விநியோகிப்பதற்காக 26 தொன் மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்தியாவினால் 55 தொன் எடையுள்ள நான்கு தற்காலிகப் பாலங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றைப் பொருத்தும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுத்து வருகின்றது. இடர் முகாமைத்துவப் பணிகளுக்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட 7 விசேட வாகனங்கள் விரைவில் உரிய துறைகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

பொருட்களுக்கு மேலதிகமாக, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்காக இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட நாடுகளிலிருந்து விசேட நிபுணர் குழுக்கள் வருகை தந்து தமது பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன. சீனா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இடர்ப் பகுதிகளை வரைபடமாக்கும் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றன. சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த குழுவினர் நீர் சுத்திகரிப்புப் பணிகளில் பங்களிப்புச் செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து உதவிகளும் விசேட கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த உதவிப் பொருட்கள் எவ்வித முறைகேடுகளுமின்றி பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தியுள்ளோம். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் பெருமளவிலான நிதி மற்றும் பொருட்களை வழங்கியுள்ளனர்.

இந்த மனிதாபிமானப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உலக நாடுகளின் தலைவர்களுக்கும் தூதுவர்களுக்கும் இலங்கை ஆளும்தரப்பு தனது நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது – என்றார்.

# 10ஆவது நாடாளுமன்றத்தில் 26 சட்டங்கள் நிறைவேற்றம்

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில்ஆளும்தரப்பினால்கொண்டுவரப்பட்ட 26 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டுள்ளன.

2025.01.01 முதல் 2025.12.31 வரையான ஒரு வருட காலப் பகுதியில் பல சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நிலையில் அவற்றில் 26 சட்டமூலங்களே சட்டமாக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)சட்டம், உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம், ஒதுக்கீட்டுச் சட்டம், சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம், குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டம்,வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்)சட்டம்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்,வேலையாட்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்)சட்டம்,வேலையாட்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம்,வேலையாட்களர்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டம், கம்பெனிகள் (திருத்தச்) சட்டம்,

மற்றும் நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டம், இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம், சமுர்த்தி (திருத்தச்) சட்டம், இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம், பணசூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைச் சட்டம், ஜனாதிபதிகளின் உரித்துரிமைகளை (நீக்குதல்) சட்டம்,தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டம்,

விளையாட்டு ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான சமவாயம் (திருத்தச்) சட்டம், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், ஒதுக்கீட்டுச் சட்டம், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (திருத்தச்) சட்டம்,பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம், செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் ஆகியன இந்த ஒருவருட காலப்பகுதியில் இயற்றப்பட்டுள்ளன.

# திஸ்ஸ விகாரையை இடிக்க அழைப்பு விடுக்கவேயில்லை

## கஜேந்திரகுமார் எம்.பி. தெளிவுபடுத்தல்

தையிட்டி திஸ்ஸ விகாரையை முறையான சட்ட நடவடிக்க மூலம் அங்கிருந்து அகற்றவேண்டும் எனவும் வலியுறுத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், இருப்பினும் அதனை மக்கள் திரண்டுசென்று இடிக்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கவோ அல்லது எவ்விதத்திலேனும் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ளவோ நாம் முயலவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் குழுவினர் இம்மாத நடுப்பகுதியில் தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்த பயணம் குறித்து அங்குள்ள அரசியல் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சு தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கிலான செய்தியாளர்கள் சந்திப்பொன்று நேற்று கொழும்பிலுள்ள கஜேந்திரகுமாரின் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பிலும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஜனவரி 3 திஸ்ஸ விகாரைக்குள் நுழைந்து அதனைச் சேதப்படுத்துமாறு மக்களை சிலர் தூண்டி விடுகின்றனர் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் மற்றும் சிறிதரன் ஆகியோர் இனவாத அரசியலிலேயே ஈடுபடுகின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறியிருப்பது பற்றியும் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. தையிட்டில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமான முறையிலேயே திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவும் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார், இருப்பினும் அதனை மக்கள் திரண்டுசென்று இடிக்கவேண்டும் என்று அழைப்புவிடுக்கவோ அல்லது எவ்விதத்திலேனும் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ளவோ தாம் முற்படவில்லை எனத் தெரிவித்தார். அதேவேளை, திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காணியின் உரிமையாளர்களிடம் அதற்கான காணி உறுதிப்பத்திரம் இருக்கின்று என்றும், ஆகவே இந்த விகாரை சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்விகாரை அங்கிருந்து முறையாக அகற்றப்படவேண்டும் எனவும் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

# காலி மாநகர சபை கூட்டத்தில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை

## அதிகாரிகள் மீது தண்ணீரை ஊற்றிய எதிர்க் கட்சியினர்

*காலி மாநகரசபையின் விசேட பொதுக்கூட்டம் நேற்று (30) காலை ஆரம்பமான போது, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட கடும் மோதல் காரணமாக சபையில் பெரும் பதற்ற நிலை உருவானது.*

*கடந்த அமர்வில் வரவு செலவுத் திட்டத்தை மோசடியான முறையில் நிறைவேற்றுவதற்கு சபையின் செயலாளரும் நகரசபை மேயரும் கைகோர்த்துச் செயற்பட்டனர் என்று குற்றம் சுமத்தி எதிர்கட்சியை சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள் தமது குடிநீர் போத்தல்களில் இருந்த நீரை செயலாளர் மீது ஊற்றி அத்துமீறி நடந்தனர். இந்த மோதல் உச்சக்கட்டத்தை எட்டியதை அடுத்து, சபையைக் கலைத்த மேயர் நிலைமையைக்கட்டுப்படுத்த பொலிஸாருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.*

*காலிமாநகர மேயர் சுனில் கமேகே (தேசிய மக்கள் சக்தி) தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் சபை அமர்வுகள் தொடங்கின. மேயர் தனதுஉரையைத்தொடங்கியவேளை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று சபைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். கடந்த சபை அமர்வின் போது வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் குறித்து அதிருப்தி வெளியிட்ட எதிர்க் கட்சியினர், வரவுசெலவுத்திட்டத்தை நிறைவேற்ற மோசடி செய்து தமது வாக்குகளைத் திருடிவிட்டனர் என்று உரத்த குரலில் கூச்சலிட்டனர்.*

*எதிர்க்கட்சியினரின் கடும் கூச்சல் மற்றும் இடையூறுகளுக்கு மத்தியிலும் மேயர் நிகழ்ச்சி நிரலின்படி சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றார். இதன்போது நிறைவேற்றப்பட்ட வரவு செலவுதிட்டம் ஆவணப்பத்தப்பட்ட சந்தரப்பத்தில், ஆவேசமடைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து சென்று சிலர் சபைச் செயலாளரைச் சூழ்ந்துகொண்டனர். பின்னர் கோசமிட்டவாறே தமது கைகளில் வைத்திருந்த குடிதண்ணீர்ப் போத்தல்களில் இருந்த நீரை பெண் செயலாளர் மீது ஊற்றித் தாக்குதல் நடத்தினர்.*

*இந்த எதிர்பாராத அநாகரிகச் செயலால் அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் அதிகாரி உடனடியாக சபையிலிருந்து வெளியேறினார். கடந்த அமர்வில் வரவு செலவுத் திட்டத்தை மோசடியான முறையில் நிறைவேற்றுவதற்கு குறித்த பெண் அதிகாரியும் நகரசபை மேயரும் கைகோர்த்துச்செயற்பட்டனர் என்று குற்றம் சுமத்தியே இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சபைக்குள் நிலவிய குழப்பகரமான சூழலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், மேயர் சபை நடவடிக்கைகளை தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அறிவித்துவிட்டு சபையிலிருந்து வெளியேறினார்.*

*சபைக்குள் உறுப்பினர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானதை அடுத்து, மேயரின் அறிவுறுத்தலின் பேரில் உடனடியாக பொலிஸார் அவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். சபைக்குள் நுழைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்ததை தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.*



காலைக்கதிர் Kalaikkathir

## சமஸ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன், அதன் தேசிய அமைப்பாளர் சுரேஸ், உத்தியோகபூர்வப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ், கொள்கை பரப்புச் செயலாளர் காண்டீபன் உள்ளிட்ட குழுவினர் இம்மாத நடுப்பகுதியில் தமிழ்நாட்டுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பயணத்தின்போது அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின், தமிழக முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி, நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவரும் தமிழக சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனரும் அதன் தலைவருமான மருத்துவர் ராமதாஸ் உள்ளிட்ட முக்கிய தலைவர்களுடன் அக்குழுவினர் பரந்துபட்ட சந்திப்புக்களை நடத்தினர்.

இந்தப் பயணம் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலேயே கஜேந்திரகுமார் நேற்று கொழும்பிலுள்ள கஜேந்திரகுமாரின் இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்ததன் பின்னர் தமிழர்களுக்கான தீர்வு குறித்த தமது நிலைப்பாட்டை தமிழ்நாட்டு அரசியல் தலைமைகளுக்குத் தெளிவுபடுத்தி, அவர்களது ஆதரவைக் கோரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தேன். இருப்பினும் உரிய ஒழுங்கின் அடிப்படையில் தமிழ்நாட்டின் சகல தலைவர்களுடனும் உத்தியோகபூர்வ சந்திப்புக்களை நடத்துவதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை.

இம்முறை தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அரசியல் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்புக்களின்போது இலங்கையில் ஒற்றையாட்சிக்குள் தமிழர்களுக்கான தீர்வு கிடைக்காது எனச் சுட்டிக்காட்டினோம். ஆகவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வை அடைந்துகொள்வதற்கு அவசியமான அழுத்தங்களை தமிழ்நாடு அரசு உள்ளடங்கலாகத் தமிழ்நாட்டுத் தலைவர்கள் வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டோம்.

அதேபோன்று 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தமிழர்களின் ஒப்புதலின்றித் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய இராச்சிய' அரசமைப்பு வரைவை மீண்டும் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் ஆளும்தரப்பினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தமிழர்களுக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படக்கூடாது எனத் தாம் வலியுறுத்தினார் எனம் அவர் தெரிவித்தார்.

அத்தோடு தமது கருத்துக்களை செவிமடுத்த முதலமைச்சர் ஸ்டாலின், அரசியல் தீர்வு விவகாரத்தில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றன எனத் தம்மிடம் கேள்வி எழுப்பினார் எனவும், அதற்குப் பதிலளித்த தாம் 'அக்கட்சிகளும் சமஷ்டி தீர்வு எனும் கொள்கையை முன்னிலைப்படுத்தியே மக்கள் ஆணையைப் பெற்றன. எனவே அவையும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கவேண்டும். அதற்கு மாறாக செயற்படுவது என்பது தமிழ்மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணாக செயற்படுவதாகவே அமையும் என விளக்களித்தாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் நோக்கத்திற்காக குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் எனக் கோருகிறேன்.

அதேவேளை தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள என ஆளும்தரப்பால் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது, அந்தக் குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களைக் கையளித்துள்ளோம். அதே போன்று காணியை உரிமை கோரும் நபர்களும் தமது காணி தான் அவை என்பதற்கான ஆவணங்களையும் கையளித்துள்ளார்கள்.

இந்த விவாகரத்தில் இதுவொரு சட்டவிரோத விகாரை எனத் தீர்பளிக்கப்பட்டால் அதனையும் ஏற்க நான் தயார்.

விகாரை காணி விடுவிப்பு தொடர்பில் இதுவரை யாரும் என்னுடன் பேசவில்லை. ஆளும்தரப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு மதிப்பளித்து விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம் என உறுதியளிக்கிறேன் - என்றார்.

# றமழான் பேரீச்சம் பழத்திற்கு வரிச் சலுகை வழங்க முடிவு

*றமழான் நோன்பு காலத்தில் இலவசமாக விநியோகிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழத்துக்கு வரிச்சலுகை வழங்குவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.*

*றமழான் நோன்பு காலத்தில் இஸ்லாமியர்களால் விசேட உணவாக உட்கொள்ளப்படும் பேரீச்சம்பழத்தை அவர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக வருடாந்தம் இராஜதந்திர ரீதியாகவும், அமைப்புக்கள் மட்டத்திலும் மற்றும் தனிநபராகவும் நன்கொடையாக அல்லது அன்பளிப்பாக வழங்கப்படும்.*

*அவற்றை வெளிநாட்டு செலாவணி செலவாகாத வகையில் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படல் வேண்டும். அடுத்துவரும் றமழான் நோன்புக் காலம் 2026.02.19 அன்று ஆரம்பித்து 2026.03.21 ஆம் திகதி முடிவடையவுள்ளது.*

*அதற்கமைய, றமழான் நோன்புக் காலத்தில் நன்கொடையாகவும் அன்பளிப்பாகவும் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழத்துக்கு வரிச்சலுகையை வழங்குவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

# கிரிபத்தொடை நகரிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில்

## நேற்றுத் திடீர் தீ விபத்து

கிரிபத்கொடை நகரில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலை மற்றும் காலணி விற்பனை நிலையம் உள்ளிட்ட இரு வர்த்தக நிலையங்களில் நேற்று (30) பிற்பகல் ஏற்பட்ட பெரும் தீ விபத்து ஏற்பட்டிருந்தது. இந்த தீப்பரவலினால் கொழும்பு - கண்டி பிரதான வீதியின் போக்குவரத்தும் பல மணிநேரம் ஸ்தம்பித்திருந்தது.

கிரிபத்கொட நகரில் அமைந்துள்ள காலணி விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று பிற்பகல் திடீரென தீப்பரவல் ஏற்பட்டிருந்தது. இந்த தீ அருகிலிருந்த பிரபல ஆடைத் தொழிற்சாலைக்கும் மிக வேகமாகப் பரவியதை அடுத்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக கொழும்பு மற்றும் கம்பஹா மாநகரசபைகளுக்குச் சொந்தமான 5 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்குனு வரவலைக்கப்பட்டிருந்தன. தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச மக்களின் கடும் பிரயத்தனத்துக்குப் பின்னர் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் தீ விபத்து காரணமாக ஏற்பட்ட கடும் புகைமூட்டம் மற்றும் பாதுகாப்பு காரணங்களினால் கொழும்பு - கண்டி பிரதான வீதி கிரிபத்கொட பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்டது. இதனால் கொழும்பிலிருந்து கிரிபத்கொடை நோக்கிய போக்குவரத்து சில மணிநேரங்களுக்கு முழுமையாகத் தடைப்பட்டிருந்தது. நிலைமையைக் கருத்திற் கொண்டு வாகனச் சாரதிகளை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், தீப்பரவல் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர், வீதி மீண்டும் திறக்கப்பட்டு போக்குவரத்து வழமைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த விபத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் இன்னும் முழுமையாக மதிப்பிடப்படவில்லை. சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். மேலும் மின் ஒழுக்கு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன், சம்பவம் தொடர்பில் கிரிபத்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய மின்சாரக் கொள்கைக்கான மக்களின் ஆலோசனைகள் ஏற்பு

தேசிய மின்சார கொள்கைக்காக பொதுமக்களின் அபிலாசைகள் மற்றும் யோசனைகளை கோரும் நடவடிக்கையை வலுசக்தி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தம்) சட்டத்தின் 4 ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய மின்சார கொள்கை சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அந்த சட்டமூலம் ாவவிள:ஃஃநநெசபலஅைை. பழஎ.டமஃ வலுசக்தி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் யோசனைகளை முன்வைக்க விரும்புபவர்கள் 2026.01.09 ஆம் திகதி அல்லது அத்தினத்துக்கு முன்னர் நெயஉ௵நநெசபலஅைை.பழஎ.டம மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ, செயலாளர், வலுசக்தி அமைச்சு இல.437.காலி வீதி கொழும்பு 03 என்ற முகவரி ஊடாகவோ அல்லது 011 2574 753 என்ற தொலைநகல் ஊடாகவோ தமது யோசனைகளை அனுப்பி வைக்க முடியும்.

இவ்விடயம் தொடர்பில் 011 2574 922 (இறுதி இலக்கம் 509ஃ 510ஃ403 ) ஊடாக அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கச் செல்லும் சஜித் பிஸ்கெட்டாவது எடுத்துச் செல்லட்டும்

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவிப்பு

பெருந்தோட்ட மக்கள் தமது நாளாந்த சம்பளத்தை ஆளும்தரப்புக்கு நன்கொடையாக வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. உதவி கிடைத்ததா என்று குறிப்பு எடுப்பதற்கு மக்கள் மத்தியில் செல்லும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிஸ்கெட்டாவது கொண்டு செல்ல வேண்டும் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர் மற்றும் ஏற்பட்ட இழப்புக்களை வைத்து எதிர்க்கட்சியினர் அரசியல் செய்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா உதவித்தொகை 98 சதவீதமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது. 50 இலட்சம் ரூபா வழங்கலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக நிவாரணம் வழங்கவில்லை. அரச அதிகாரிகள் மந்தகதியில் செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள்.

அனர்த்தத்தால் அரச உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் குடும்பத்தாரும், உறவினர்களும் உயிரிழந்துள்ளார்கள். ஆகவே நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் அரச உத்தியோகத்தர்கள் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இயற்கைப் பேரிடரால் பெருந்தோட்ட மக்கள்தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இருப்பினும் அவர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை ஆளும்தரப்புக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது.

எதிர்க்கட்சித் தலைவர் நாடு முழுவதும் சென்று நிவாரணம் கிடைத்ததா, கிடைத்ததா என்று பொதுமக்களிடம் கேட்டு குறிப்பு எடுத்துக் கொள்கிறார். மக்கள் மத்தியில் வெறுங்கைகளுடன் செல்லாமல் பிஸ்கெட் பெக்கட்டாவது கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# சில தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் அமையும்

தெரிவு செய்யப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிக்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல், தெற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் 864 பாடசாலைகள் இயங்குகின்றன.

அப்பாடசாலைகளில் அதிகமானவை நகரங்களிலிருந்து தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ளமையால், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு பாடசாலைகளுக்குச் செல்வதற்குச் சிரமங்கள் காணப்படுகின்றன.

அப்பாடசாலைகளில் இரண்டாம்நிலைக் கல்வி வகுப்புக்களில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையால் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை போன்ற தேசியப் பரீட்சைகளில் அப்பாடசாலைகளின் மொத்தத் தேர்ச்சி ஏனைய அரச பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் இருக்கின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலைமை பெரும்பாலும் இளைஞர் தலைமுறையினர் திறனற்ற தொழிலாளர்களாக உருவாவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதனால், தோட்டப் பாடசாலைகளில் மனிதவளம் மற்றும் பௌதீக வளங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத் தேவை காணப்படுகின்றது.

அதற்கமைய, ஆசிரியர் பற்றாக்குறையைக் குறைத்து இப்பாடசாலைகளில் மனித வளங்களை அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில், அந்தந்த மாகாணங்களில் ஆசிரியர் விடுதி தேவைகள் காணப்படுகின்ற 14 தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டங்களை அந்தந்த மாகாண சபைகள் மூலமாக அமுல்படுத்துவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விளையாட்டு அபிவிருத்தி பணிப்பாளராக அதிகாரி அச்சுதனை நியமிக்கத் தீர்மானம்

*விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக அச்சுதன் நியமிக்கப்படவுள்ளார்*

*தற்போது வெற்றிடமாகவுள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு தகைமையுடைய ஒருவரை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. அதற்கான நேர்முகத்தேர்வில் 6 விண்ணப்பதாரிகள் தோற்றியுள்ளனர். அதற்கமைய, நேர்முகத் தேர்வுக் குழாமினரால் விதந்துரைக்கப்பட்டுள்ளதும்,*

*தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளராக கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான அச்சுதனை இந்த பதவிக்க நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைய 2026.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த பதவிக்கு அவரை நியமிப்பதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறைமிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்டோர் உரிமைகளை காக்க தனியான சட்டக் குழு அமைக்க முடிவு

## எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

'தித்வா' புயலால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி சட்டக் குழுவொன்றை ஸ்தாபிக்கவுள்ளது. வர்த்தமானி அறிவித்தல்கள், நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி குரல் கொடுக்கும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அநுராதபுரம் – இராஜாங்கனய யாய 11 பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று செவ்வாய்கிழமை கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தித்வா' புயலின் போதும், அதன் பின்னரும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும், மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரசுத் தலைவர் அநுருகமார குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவ்வாறு வாக்குறுதியளித்த சலுகைகள், நிவாரணங்கள், அவற்றுக்குத் தேவையான வளங்கள் மற்றும் நிதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஆளும்தரப்பு தோல்வி கண்டுள்ளது.

ஒரு தகரத் துண்டு அடிபட்டுச் சென்றாலும் அதற்கும் 10 இலட்சம் ரூபா தருவோம் என்று உறுதியளித்த ஆளும்தரப்பு, முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு வழங்குவதாகக் கூறிய 50 இலட்சம் ரூபாவைக் கூட இன்னும் வழங்கவில்லை. அது மாத்திரமின்றி மக்கள் வாழ்வதற்கு பொறுத்தமற்ற காணிகளிலிருந்து அவர்களை வெளியேற்றி, பாதுகாப்பான காணிகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனால் இதுவரையில் அவ்வாறு பாதுகாப்பான காணிகளை வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

'தித்வா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என்று அரசாங்கத்திடம் நாம் கேட்டுக்கொள்கிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவிக்கப்பட்டபடி சகல நிவாரணங்களையும் வழங்க வேண்டும். நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு நான் இவ்வாறு பயணம் செய்யும் வேளைகளில், தொழிலதிபர்கள் மற்றும் தொழில்முனைவோருடன் பேசிய சந்தர்ப்பங்களில், அவர்களின் கடன்களை அறவிடும் நடவடிக்ககளை நிறுத்துவதாக ஊடகங்கள் வாயிலாக அரச தரப்பினர் அறிவித்த செய்திகளை நடைமுறையில் காண முடியாதுள்ளதை தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆளும்தரப்பு இவற்றை ஊடகங்கள் மூலம் பொறுப்புடனே விளம்பரப்படுத்தியது. தொழில்முனைவோர், தொழிலதிபர்களுக்கு, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு, விவசாய சமூகத்தினருக்குப் பெற்றுத் தருவோம் என்ற இழப்பீடுகளை ஆளும்தரப்பு உரியவாறு பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த போகத்தில் விவசாயம் சரியாக செய்யப்படாவிட்டால், உணவு நெருக்கடியும் ஏற்படும். எனவே அனைவர் குறித்தும் சிந்தித்து, இந்த விடயத்தை பரந்த கண்ணோட்டத்தில் நோக்கி, அறிவித்த நிவாரணங்களை உரிய தரப்புக்கு பெற்றுக் கொடுக்க ஆளும்தரப்பு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'தித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி சட்டக் குழுவொன்றை ஸ்தாபிக்கவுள்ளது. வர்த்தமானி அறிவித்தல்கள், நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் வாக்குறுதியளித்த விடயங்கள், ஏனைய சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகள், தெரிவித்த கருத்துக்கள் ஊடாக வாக்குறுதியளித்த, அறிவிக்கப்பட்ட நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வரை, இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை, ஐக்கிய மக்கள் சக்தி இந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக முன்நிற்கும்.

இந்த உரிமைகள் மக்களின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளாகும். எனவே மக்கள் இவற்றைப் பெறும் வரை எதிர்க்கட்சி போராடும். இந்த நிவாரணம், சுயதொழில் செய்பவர்கள் முதல் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். வாக்குறுதியளிக்கப்பட்ட நிவாரணம் வழங்கப்படுவது போல, இந்த நிவாரணத் தொகைகளை குறைக்கக் கூடாது. நிவாரணங்கள் மக்களுக்கு கிடைக்கும் வரை எதிர்க்கட்சி கண்காணித்துக் கொண்டே இருக்கும். அவ்வாறே, எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமான அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### சுகாதாரப் பாதுகாப்புக்காக

# மோடியின் நேரடித் தலையீட்டைக் கோரும் இலங்கை விசேட வைத்திய நிபுணர்கள்

இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடித் தலையீட்டை நாம் கோரியுள்ளோம் என்று விசேட வைத்திய நிபுணர் சமால் சஞ்சீவ விசனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் சுகாதாரத்துறையில் நிலவும் பெரும் பின்னடைவுகள் மற்றும் மருந்து ஒழுங்குமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணக் கோரி, மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகளுக்கான சங்கங்களின் கூட்டமைப்பு இந்தியப் பிரதமருக்கு விசேட மனு ஒன்றைக் கையளித்துள்ளது.

நேற்று (30) காலை இந்திய உயராணையரகத்தில் இதனை ஒப்படைத்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமால் சஞ்சீவ தெரிவித்ததாவது:

வாழும் உரிமையை அடிப்படை உரிமையாகக் கொண்ட இந்திய அரசமைப்பைப் போலவே, எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்கான பொறுப்பு எமக்கு உண்டு. தற்போது இலங்கையின் சுகாதாரத் துறை மோசமான நிர்வாகச் சீர்கேட்டினால் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இந்த நிலையில், இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடித் தலையீட்டை நாம் கோரியுள்ளோம்.

குறிப்பாக, இலங்கையில் தரமான மருந்து விநியோகத்தை உறுதிப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரித்த ஆய்வகம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

இது ஒரு கடனாக அன்றி, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் வழங்கப்படும் நிதியுதவியாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். அரசாங்கமும் அதிகாரிகளும் பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள் எனினும மக்களுக்குத் தேவை தீர்வுகளே.

அரச வைத்தியசாலைகளில் போதியளவான ஊழியர்கள் இல்லை, பரிசோதனை உபகரணங்கள் செயலிழந்துள்ளன, அறுவைச் சிகிச்சைகளுக்காகக் காத்திருக்கும் போதே நோயாளிகள் மரணிக்கும் அவலம் தொடர்கிறது.

கடந்த காலங்களில் இத்துறையில் பதவி வகித்த அதிகாரிகளே இன்று ஊடகங்களுக்கு முன்னால் வந்து ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக் கொள்கின்றனர். சுகாதார அமைச்சரோ அல்லது ஜனாதிபதியோ இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வில்லை. ஜனாதிபதியைச் சந்திக்க நாம் பலமுறை விடுத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சுகாதார துறையில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக, பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களையும் சிவில் அமைப்புகளையும் ஒடுக்க சுகாதார அமைச்சர் முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது. சந்திரனைக் காட்டும் போது விரலை வெட்ட நினைப்பது போன்ற இச்செயல் அமைச்சருக்கு நல்லதல்ல. ஊடகங்களை முடக்குவதன் மூலம் சுகாதார நெருக்கடியை மறைக்க முடியாது.

எனவே, அடக்குமுறைகளை விடுத்து, மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்த இந்திய – இலங்கை நட்புறவைப் பயன்படுத்தித் தீர்வு காண முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# கொழும்பு, காலியில் புத்தாண்டுக்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

எதிர்வரும் புத்தாண்டு வருடப்பிறப்பை முன்னிட்டு கொழும்பு மற்றும் காலி முகத்திடல் உள்ளிட்ட பகுதிகளில் பெருமளவான பொதுமக்கள் ஒன்றுக் கூட உள்ளமையால் இப்பகுதிகளில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய இந்த நடவடிக்கைகளுக்காக தலைநகரில் மாத்திரம் சுமார் 1200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புத்தாண்டு பிறப்பையொட்டி தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன. நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குமுறை பணிகளுக்காக சுமார் 1,200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். வீதியோரங்களில் அல்லது நடைபாதைகளில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை நிறுத்துபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் குருந்துவத்தை ஆகிய பகுதிகளில் அதிக வாகன நெரிசல் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் காலி முகத்திடல் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். அதன்படி, காலி முகத்திடல் வீதி ஊடாக கொழும்பிலிருந்து வெளியேறும் வாகனங்கள், சாரணர் அணி மாவத்தை சந்தி ஊடாகத் திருப்பப்பட்டு, மாக்கன் மாக்கர் மாவத்தை வழியாக கொள்ளுப்பிட்டியை சென்றடைய முடியும்.

அதேநேரம், காலி முகத்திடல் மாக்கன் மாக்கர் மாவத்தை ஊடாக அலியா நான சுற்றுவட்டம் நோக்கியோ அல்லது அங்கிருந்து காலி முகத்திடல் வீதியினுடான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்படும். பொதுமக்கள் வாகனங்களை நிறுத்துவதற்காக சுமார் 5,900 வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதியுடன் தரிப்பிடங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய சாரணர் அணி மாவத்தை, கொள்ளுப்பிட்டி–வெள்ளவத்தை கடற்கரை வீதி, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, சுதந்திர சதுக்கம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் இலவசமாக வாகனங்களை நிறுத்த முடியும்.

மேலும், புறக்கோட்டை பழைய மெனிங் சந்தை, லேக் ஹவுஸ் தரிப்பிடம் மற்றும் கோட்டைப் பகுதியில் சில இடங்களில் கட்டண அடிப்படையில் வாகனங்களை நிறுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விசேட போக்குவரத்துத் திட்டத்தால் சாரதிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக, அறிவிக்கப்பட்டுள்ள மாற்று வழிகளைப் பின்பற்றுமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பேரிடர் பாதித்த தொழில்களுக்கான நிதிச் சலுகையை அதிகரிக்க முடிவு

நாட்டில் வியாபாரத் துறையை துரிதமாக மீள்நிலைக்குக் கொண்டு வருவதற்காக பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நிதிச் சலுகையை அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மீள்நிலைக்குக் கொண்டு வருவதற்காக 'RE—MSME – இடர் சலுகை' கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2025.12.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இடர் நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு ஆறுமாத கால சலுகைக் காலத்துடன் கூடிய மூன்று ஆண்டுகள் மீள்செலுத்தும் தவணைக் காலத்துக்கு நுண் தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 250,000 ரூபாய் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 1 மில்லியன் ரூபா வரை 3 சதவீத வருடாந்த வட்டிவீதத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகள் மூலம் செயற்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பேரிடர் நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள பெருமளவிலான தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் முயற்சியாளர்களுக்கும் அனுகூலங்களை வழங்கக்கூடிய வகையில் தனியார் வங்கிகளின் பங்களிப்புடன் இக்கடன் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, பேரிடர் நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தொழில் முயற்சியாளர்களுக்கும் 06 மாதகால சலுகைக் காலத்துடன் கூடிய 3 ஆண்டுகள் மீள்செலுத்தல் தவணை முறையில் நுண் தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 250,000 ரூபாய் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 1 மில்லியன் ரூபா வரைக்கும், நடுத்தர மற்றும் பெருமளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்தபட்சம் 25 மில்லியன் ரூபா வரை 3 சதவீத வருடாந்த வட்டிவீதத்தில் அனுமதிபெற்ற வணிக வங்கிகள் மற்றும் அனுமதிபெற்ற விசேட வங்கிகள் மூலம் செயற்பாட்டு மூலதனக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் 'விரிவான இடர் சலுகைக் கடன் திட்டம்' எனும் பெயரிலான உத்தேச கடன் திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக 5 பில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 22 நாடுகள் உதவி

'தித்வா' புயலால் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்காக 22 நாடுகள் மற்றும் உலக உணவு திட்டம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களிடமிருந்து இதுவரையில் 2161 தொன் உணவு உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் கிடைத்துள்ளன. அவற்றில் 1800 தொன் பொருட்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார். கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

22 நாடுகள் மற்றும் உலக உணவு திட்டம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களிடமிருந்து மனிதாபிமான உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக 2161 தொன் உணவு உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் சுமார் 1800 தொன் பொருட்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவை தவிர 26 தொன்னுக்கும் அதிக மருந்து பொருட்களும் கிடைத்துள்ளன. அவை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், பாக்கிஸ்தான், சீனா, இதாலி, சுவிஸர்லாந்து மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிடமிருந்து மீட்பு குழுக்களும் , மருத்துவ குழுக்களும் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவற்றின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை. விரைவில் அது தொடர்பில் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை உதவிகள் கிடைத்துள்ளதால் விசேட கணக்காய்வு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கப் பெறும் இந்த ஒத்துழைப்புக்கள் வெளிப்படை தன்மையுடனும், பாதுகாப்புடனும் முறைகேடாகப் பயன்படுத்தப்படாமல் மக்களை சென்றடைகின்றன. கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இதற்காக கொழும்பு - ஒருகொடாவத்தை பகுதியில் விசேட அலுவலகமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிவாரணங்கள் முறையாக மக்களை சென்றடைகின்றதா என்பதும் கண்காணிக்கப்படுகிறது என்றார்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# JRIDE




இலங்கையின் பயணிகள் செயலி

SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA






இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2025 வெளியிடப்பெற்றது.